பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

கால் நடை வைத்திய
நிலையம் (தனியார்)

கால்நடை வைத்திய
ஆலோசனை,
செயற்கைமுறைச்
சினைப்படுத்தல்,
கோழிகளுக்கு றனிக்கட்,
அம்மை தடுப்பூசி ஏற்றல்
ஆகிய சேவைகளுக்கு

சித்தி மெடிக்கல்
சென்ரர்
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

# உதயன்

விலை ரூபா 3-50

ஆங்கில மருந்து வகைகள்,
ஆயுள் வேத மருந்து
வகைகள்,
கோவில் அபிஷேகச்
சாமான்கள்.
மற்றும்
நாட்கருமங்களுக்குரிய
சாமான்கள்

தினசரி மாலை வைத்திய
சேவை எல்லாவற்றிற்கும்

சித்தி மெடிக்கல்
சென்ரர்
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

சுடர் 5: பிரமோதூத ஸ்ரீ ஆனி மீ 29 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ்ஜா பிறை 19 (13-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 140

# கொக்காவில் முகாம் புலிகளால் தகர்ப்பு!

## சுமார் நூறு படையினர் உயிரிழப்பு

### 6 பெண் புலிகள் உட்பட 18 பேர் வீர மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

கொக்காவில் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தி அந்த முகாமைக் கைப்பற்றினர்.

தாக்குதலின் போது முகாம் கட்டடம் தகர்க்கப்பட்டது. தாக்குதலினாலும், கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியும் 45இற்கும் அதிகமான இராணுவத்தினர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆறு பெண் போராளிகள் உட்பட 18 விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலில் வீரமரணம் அடைந்தனர்.

பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப் பட்டன.

கொக்காவில் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது 46 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும்-

சுமார் 50 இராணுவ வீரர்கள் விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும் இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது.

கடந்த செவ்வாய், புதன் ஆகிய இருநாட்களும் இந்தத் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்பட்டது.

பின்வரும் ஆயுதங்கள் இந்தத் தாக்குதலில் தங்களால் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன:—

- ★ ஏ.கே- எல்.எம்.ஜி- 4
- ★ ஆர்.பி.ஜி -4
- ★ ஏ.கே றைபிள் -50
- ★ மோட்டார் -4

விடுதலைப் புலிகள் தரப்பில்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலும் கப்பல் மீது கடற்புலிகள் தாக்குதல்!

கொழும்பு, ஜூலை 13

திருகோணமலைக் கடலில் இலங்கைக் கடற் படைக் கப்பல் ஒன்றின் மீது படகுகளில் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கரும் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அதில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

இப்படி இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என்று ஏஜன்ஸிச் செய்தி ஒன்று நேற்றிரவு தெரிவித்தது. (அ-எ)




நேரத்துக்கு ஒரு முசுப்பாத்தி விடுகிறதுக்கு அரசாங்கத்திலை உப்பிடியும் ஒருத்தர் இருந்தால் தான் சுவாரஸ்யம் எண்டு நினைச்சு உவரை நியமிச்சினமோ......!

### சுபநேரம்

13- 7 - 90

வெள்ளிக்கிழமை ஆனி 29

சுபநேரம்!
05-59— 07-29

இராகுகாலம்
10-29—11-59

# திருமலையில் மீண்டும் தமிழ் தீவிரவாத குழு!

## ஸ்ரீலங்கா படைகளுக்கு உதவ கொண்டுவரப்பட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

இந்தியப் படையுடன் வடக்கு, கிழக்கிலிருந்து வெளியேறிய தமிழ் தீவிரவாதக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள் மீண்டும் திருகோணமலையில் நடமாடத் தொடங்கியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளுக்கு உதவ இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் திருமலைக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவைச் சேர்ந்தவர்களில் ஒரு தொகையினர் தற்போது திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டு, திருமலை சிங்கள மாகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும்—

ஆயுதங்கள் எதுவும் வழங்கப்படாத நிலையில் அவர்கள் சிங்கள மகாவித்தியாலய கட்டடங்களில் தங்கியிருப்பதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை-

முன்னர் இந்தியப் படை திருகோணமலையில் இருந்த போது அங்கு தங்கி நின்று பிரபலமாக செயற்பட்ட பிரமுகர் ஒருவர் தற்போது வந்திருக்கும் குழுவில் இடம்பெற்றிருப்பதாகவும் -

அவரைத் தாம் நேரடியாகக் கண்டதாகவும் திருகோணமலையிலிருந்து அண்மையில் வெளியேறி நேற்றுமுன்தினம் மாலையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அரசதுறையைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''விடுதலைப் புலிகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சிக்கு போட்டித் தமிழ்த் தீவிரவாதிகள் குழுக்களையும், முஸ்லிம் தீவிரவாதிகள் குழுக்களையும் சேர்ந்த உறுப்பினர்களின் உதவியை ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் பெற்று வருகிறார்கள் என்ற தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவும் நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## தற்கொலைக்கும் தயாரான துணிச்சல் மிக்க புலிகள்!

### வர்ணிப்பவர் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 13

தற்கொலைக்கும் தயாரான துணிச்சலான வீரர்களைக் கொண்டவர்கள் விடுதலைப் புலிகள்!

இப்படி யார் வர்ணித்தார்கள் என்று நினைக்கிறீர்கள்? சாட்சாத் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா தான்!

முன்னர் ஒருதடவை விடுதலைப் புலிகளை மழலைப் படையினர் என்றுநையாண்டி பண்ணிய அவரே நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்;-

அவர்நேற்றுச்சொன்னார்;-

தற்கொலைக்கும் தயாரான துணிச்சலான வீரர்களைக் கொண்ட விடுதலைப் புலிகள் கடற்படைக் கப்பலைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர் மீதான தாக்குதல் இந்தியா மீதான ஆக்கிரமிப்பே!

## இலங்கைக்கு எதிராக தி.மு.க கண்டன தீர்மானம்

கொழும்பு, ஜூலை 13

ஈழத்தமிழர் மீது தாக்குதலை நடத்தி அவர்களை அங்கிருந்து வெளியேறும்சூழ் நிலையை உருவாக்கியதன் மூலம் இலங்கை அரசு, இந்தியாவின் மீது ''புதுவிதமான ஆக்கிரமிப்பு'' ஒன்றைச்செய்திருக்கிறது.

இதேநேரம், சர்வதேச சமூகத்தின் சமரச முயற்சியை நாடுவதாக இலங்கை அரசு அறிவித்திருப்பது இந்தப் பிரச்சினையில் இருந்து இந்தியாவைவிலக்கிவைக்கும் முயற்சியாகும்.

இப்படி தி.மு.க செயற்குழு நேற்று நிறைவேற்றிய கண்டன தீர்மானம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நேற்றுநடந்த தி.மு.க செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

முதலமைச் சரும் கழகத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத்தமிழருக்கு இன்னல்:

## தமிழகத்தில் 20 ஆம் திகதி முழு அளவில் ஹர்த்தால்

சென்னை, ஜூலை 13

ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து தமிழக மக்களின் வேதனையை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் 20 ஆம் திகதி பொது வேலைநிறுத்தம், கடையடைப்பு நடத்தப்படவுள்ளது.

திராவிட முன்னேற்றக்கழக தலைவரும் முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி நேற்றுச் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் படுகொலை செய்யப்படுவது அதனால் பெரும் எண்ணிக்கையில் தமிழ் அகதிகள் தமிழ்நாடு வருவது- ஆகியவற்றால் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனை இதன்மூலம் வெளிப்படுத்தப்படும் என்று தி. மு. க. அறிவித்துள்ளது. (ஓ-எ)

## திராவிடர் கழகம் நேற்று சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 13

ஈழத்தமிழர் மீது நடத்தப்படும் இரக்கமற்ற இராணுவத் தாக்குதல்களைக் கண்டித்து திராவிடர்கழகத் தொண்டர்கள் நேற்று சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

பொதுச் செயலாளர் கி. வீரமணி தலைமையில் சுமார் 500 தொண்டர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின் முடிவில் திரு கி.வீரமணி சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரிடம் மனு ஒன்றைக் கையளித்தார். (உ-எ)

## திருமலையில் இருந்து கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

திருகோணமலையில் நிர்கதியாகியுள்ள வெளிமாவட்ட மக்கள் படையினரின் பாதுகாப்புடன் கொழும்புக்கு அனுப்பப்படுகிறார்கள்.

திருகோணமலை மெதடிஸ் தேவாலய பங்குதந்தையின் கோரிக்கையை அடுத்து படையினரின் பாதுகாப்புடன் கடந்த 8 ஆம் திகதி முதல் தமிழர்கள் இ. போ. ச பஸ்கள் மூலம் கொழும்புக்கு அனுப்பப்படுகிறார்கள்.

இப்படி கொழும்பு சென்றவர்களில் சிலர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர். (இ-3)

# தமிழ் அகதிகளின் படகு கடற்படையால் மூழ்கடிப்பு

## 21 பேர் உயிரிழப்பு; 14 பேர் தப்பினர்

லண்டன், ஜூலை. 13

இலங்கையிலிருந்து 35 தமிழ் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்றை நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினர் தாக்கி மூழ்கடித்தனர்.

படகில் இருந்த அகதிகளில் 14 ஆண்கள் ஒருவாறு நீந்தித் தமிழகக் கரையை அடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ஏனைய 21பேரும் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இவ்வாறு அகதிகள்மீதுதாக்குதல் மேற்கொள்ளும் இலங்கைக் கடற்படைக் கப்பல்கள், இந்தியக் கடற்பரப்பிற்குள் நுழைந்துவிடாமல் தடுப்பதற்காக இந்தியக் கடற்படையின் இரண்டு கப்பல்கள் பாக்குநீரிணைப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளதாவும்அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-9)

## இந்தியா செல்ல ஆயத்தமாக 10,000 பேர் பேசாலையில்

தற்பொழுது விடத்தல்தீவிலும், பேசாலையிலும் சுமார் பத்தாயிரம் பேர் இந்தியா செல்ல காத்து நிற்பதாகத் தெரிய வருகிறது.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அனேகர் பஸ்கள் மூலம் விடத்தல்தீவுக்குச் சென்று அங்கிருந்து வள்ளங்கள்மூலம் பேசாலையைச் சென்றடைகிறார்கள்.

பேசாலையில் இருந்து தினமும் 15 வள்ளங்கள் வரையில் அகதிகளை ஏற்றிக்கொண்டு இந்தியா செல்வதாகக் கூறப்பட்டது. (ஒ-3)

## மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்

கொழும்பு, ஜூலை 13

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் ஒத்திவைக்கப்படக் கூடும்.

இத்தகவலை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படையினருக்கும் இடையே வடக்கு - கிழக்குப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் சண்டையே வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான காரணமாகும் என்றும் அமைச்சர் சொன்னார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவ

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆனையிறவு முகாமில் இருந்து சுமார் நூறு யார் தூரத்தில் காவல் அரண் (சென்றி) ஒன்று அமைக்க முயன்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டு, பின் வாங்கினர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உள்ளே சென்ற இராணுவத்தினர் ஷெல் வீச்சு நடத்தியதால்ஆனையிறவு ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டது. கிளிநொச்சி, வவுனியா ஆகிய பகுதிகளுக்கெனச்

(3 ஆம் பக்கம் பார்க்ப)

## தள்ளாடி மோதலில் 4 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

நேற்று தள்ளாடிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மில்லர், பாரதி, வேதமணி, மயூரன் ஆகிய நான்கு விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

தள்ளாடி முகாமிலிருந்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் வெளியேறிய படையினர் மீதே தள்ளாடிக்கும் திருநாவற்குளத்திற்கும் இடையில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவத் தரப்பிலும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## கொள்ளை!

யாழ்ப்பாணம், ஜூலை 13

செட்டிகுளம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் நேற்றுக் காலை பத்துமணியளவில் இராணுவச் சிப்பாய்களினால் கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகள் தாக்கியதை அடுத்து கொள்ளையிட்டுக்கொண்டிருந்த படையினர் அங்கிருந்து பின்வாங்கினர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ் சிறு விளம்பரம்

**தேவை**

பனம்பாணி தேவை. கையிருப்பில் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். (சி-5261)

**தவறிவிட்டது**

பன்னீர்செல்வம் கண்ணம்மா 9ஆம் வட்டாரம். புங்குடுதிவு அவர்களின் தேசிய அடையாள அட்டை 10-07-90 அன்று திருநெல்வேலி சந்தையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பொ. சண்முகநாதன் (திருகோணமலை வர்த்தகர்). இல, 5. சந்தைதிருநெல்வேலி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13720)

**காணவில்லை**

கறுப்பு நிற அடிப்பாகம் மண் நிறமுடைய, காதுகள் மடிந்த சாதாரண இனநாயை 09-07-90 முதல் காணவில்லை. கண்டவர்கள் 38 மாட்டின் ஓழுங்கையில் தகவல் தரவும் தகுந்த சன்மானம் தரப்படும். (13721)

**இறைச்சிக் கோழி**

இறைச்சிக்கு உகந்த சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு விலை குறைக்கப்பட்டுள்ளது சற்குணராஜா & 'பிரதர்ஸ்' பிரம்படி வேன், கொக்குவில். (13596)

# சாம்பல்தீவு- கும்புறுப்பிட்டி வரை பயிர்கள் அழிகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 13 திருகோணமலை மாவட்டத்தில் சாம்பல்தீவில் இருந்து கும்புறுப்பிட்டி வரையுள்ள பிரதேசங்களில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட வெங்காயம், புகையிலை, மிளகாய், போன்றவை அழிந்து போகும் நிலையில் உள்ளன.

வெங்காயம் இம்முறைநூறு ஏக்கருக்கும் அதிகமாக அங்கு செய்கை பண்ணப்பட்டுள்ளது.

அவை அறுவடை நிலையில் உள்ளபோதிலும் விவசாயிகள் இடம் பெயர்ந்துள்ளதால் கவனிப்பாரற்று விடப்பட்டுள்ளன நிலாவெளியில் இம்முறை கூடுதலாக புகையிலை செய்கை பண்ணப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் கடந்த காலங்களை விட இம் முறைதான் விவசாயத்தில் கூடிய அக்கறை செலுத்தினர் என்றும் அதன் பயனைப் பெறமுடியாத நிலை ஏற்படுட்ள்ளதுஎன்றும் அந்த விவசாயி மேலும் தெரிவித்தார். (இ-10)

## 10 மீனவரை காணவில்லை

சென்னை, ஜூலை 13 தூத்துக்குடியில் இருந்து கடலுக்கு சென்ற பத்து மீனவர்களைக் காணவில்லை என்று தமிழ்நாடு மாநில அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விமானப்படை விமானம் ஒன்று தேடுதல் நடத்தியதாகவும் அது பலனளிக்கவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (உ-எ)

## உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முயற்சி

நெடுந்தீவு, ஜூலை 13 நெடுந்தீவில் நிலவி வரும் உணவு நெருக்கடியைத் தீர்க்கும் முயற்சியில் நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு. எம். எம். வி. அமிர்தகுமார் பல, நோ. கூ. சங்க ஊழியர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

பங்குத் தந்தை யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்துடன் தொடர்பு கொண்டு அவர்களது உதவியுடன் உணவுப் பொருள்களைப் பெற்றுள்ளார்.

பல. நோ. கூட்டுறவுச் சங்கமும் சீனி, அரிசி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களை நெடுந்தீவுக்கு எடுத்துச் சென்றுள்ளது இவை பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். (இ - 111)

## அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஜூலை,13 அரியாலையைச் சேர்ந்த இராசையா முத்தையா என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் அதனை நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

அதே சமயம் சங்கரப்பிள்ளை மகேஸ்வரி (வேப்பங்குளம். வவுனியா) என்பவரின் அடையாள அட்டையும் வீதியில் கண்டெடுக்கப்பட்டு உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கபபட்டுள்ளது. (அ)

## பனம் பொருள் உற்பத்தியில் ஈடுபட புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 13 பதநீர்மூலம் எமது பிரதேசத்துக்குத் தேவையான பனங்கட்டி, பனம்சீனி, குளிர்பானங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்க வேண்டும்''

மேற்கண்ட கோரிக்கையை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி சகல தெங்கு, பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விடுத்துள்ளது.

பனை மரங்களில் இருந்து கள் உற்பத்தி செய்வதை நிறுத்தி மேற்கண்ட பொருள்களை உற்பத்தி செய்யும் படி கோரிக்கை விடப்பட்டுள்ளது (இ)

### ஒட்டுசுட்டானில்

## அமைதிப்படை முன்பு தங்கிய கட்டடங்கள் பல தகர்ப்பு

ஒட்டுசுட்டான், ஜூலை 13 ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன அலுவலகம், சுற்றுலா விடுதி. களஞ்சியம் மற்றும் 15க்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர் விடுதிகள் தகர்க்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டடங்களில் இந்திய அமைதிப் படையினர் முன்னர் நிலை கொண்டு இருந்தனர்.

இதேவேளை பால் சேகரிப்பு நிலையத்துக்காக கட்டப்பட்டுள்ள கட்டடமும் அழிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பொலீஸ் நிலைய இரு மாடிக் கட்டடமும் அண்மையில் முற்றாக குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. (இ-113)

## ஜனநாயக நடைமுறையை இலங்கை அரசு அழித்துவிட்டது

### ஈ.பி.ஆர்.எல்.எப். குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூலை 13 விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்டு ஈ பி. ஆர். எல். எப். தலைமையிலான வடக்கு – கிழக்கு மாகாண சபைக்குப் போதிய அதிகாரங்களைப் பகிர்வு செய்யாது ஜனநாயக நடைமுறையை இலங்கை அரசு அழித்துவிட்டது.

ஈ. பி. ஆர். எல். எப் இயக்கப் பிரமுகர் திரு. கே. சாந்தன் புதுடில்லியில் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டி உள்ளார்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

இன்று இலங்கையில் நடைபெறும் சிவில் யுத்தமும் அதன் பலனாகத் தமிழ் அகதிகள் பெருமளவில் இந்தியா செல்லத் தொடங்கியிருப்பதும் இலங்கை அரசின் இந்த நடவடிக்கையின் நேரடி விளைவாகும்.

விடுதலைப்புலிகளை ஜனநாயக வழிகளுக்குக் கொண்டு வரும் ஒரு முயற்சி என்று கூறி அரசு மாகாணசபைச் சட்டத் திருத்தத்துக்கு நியாயம் கற்பிக்கலாம்.

ஆனால் திருத்தச் சட்டங்களை அரசு கொண்டு வந்தது ஜனநாயக நீரோட்டத்தில் இருந்து ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்தை அகற்றுவதற்கே ஆகும்.

இது இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் மீண்டும் ஒரு முறை பாதிக்கவே செயயும்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. (இ - எ)

## பயிர் அழியும் அபாயம்

பச்சிலைப்பள்ளி ஜூலை 13 நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் விவசாயப் பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

## பனிப்புலம் முத்துமாரி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 13 பனிப்புலம் முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மாஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர் வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறு நாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ-3)

## தள்ளாடி ராணுவம் ஷெல்லடி; பொதுமக்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13 தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து மன்னார் நகரை நோக்கி இரவு நேரங்களில் தினமும் ஷெல் வீச்சுநடத்தப்படுகிறது.

கடந்த வாரம் மட்டும் ஒரு முஸ்லிம் நபர் உட்பட ஆறு பொதுமக்கள் ஷெல்லுக்கு இரையானதாக யாழ்ப்பாணம் வந்த அரச ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

தாழ்வுபாடு கிராமத்தில் விழுந்த ஷெல்லுக்கு இரண்டு சிறுவர்கள் காயமடைந்தனர்.

நகரிலுள்ள கடைகள், வீடுகள் ஷெல்வீச்சால் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

ஆண்டு ஒன்பதில் எம் அஞ்சலி செல்வமே



ஸ்ரீ தேவன் இரவீந்திரன்

மண்ணகத்தில்: 08 - 09 - 1962

விண்ணகத்தில்: 13 - 07 - 1981

எங்கள் இதயத்து
எல்லாக் களத்திலும்
நின்று கூத்திடும்
நிகரிலா இரவீந்திரா
இன்றுடன் ஆண்டு
ஒன்பது நிறையிலும்
என்றும் நினைவோம்
நினைவோம் நினைவே

அப்பா, அம்மா, தம்பி, உறவினர், நண்பர்கள்.

36/1, செட்டித்தெரு, நல்லூர். (13711)

## 31 பயணிகள் உயிரிழப்பு

மாஸ்கோ, ஜூலை 13 மாஸ்கோ ரயில் கடவை ஒன்றில் பஸ் ஒன்று ரயிலுடன் மோதியதில் 31 பயணிகள் உயிரிழந்தனர்.

உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை டெலிவிஷனில் பார்க்கும் அவசரத்தில சாரதி பஸ்ஸை விரைவாகச் செலுத்தினார் என்றும் அப்போது பஸ் ரயிலுடன் மோதியதாகவும் டாஸ் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது [இ-எ]

# வி. பி. சிங் காஷ்மீருக்கு விஜயம்

புதுடில்லி ஜூலை 13 பிரதமர் வி பி சிங் அடுத்த மாதம் காஷ்மீருக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததன் பின்னர் காஷ்மீர் மாநிலத்துக்கு திரு வி பி. சிங் விஜயம் செய்வது இதுவே முதல் தடவை ஆகும்.

இதனிடையில் காஷ்மீரில் இயங்கும் பிரிவினை வாதக் குழுக்கள் சில இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்த விருப்பம் தெரிவித்திருப்பதாக காஷ்மீர் மாநில ஆளுநர் கிரிஷ் சந்திராஸக்ஸேனா அறிவித்திருக்கிறார்.

காஷ்மீர் தொடர்பாக இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி இஸ்லாமபாத்தில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இதனையொட்டி, காஷ்மீரில் சண்டை நிறுத்தம் ஒன்றை அறிவிக்க வேண்டும் என்று காஷ்மீர் பிரிவினைவாதக் குழுக்கள் சில இந்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளன (இ-எ)

### சோவியத்யூனியனில்

## பிரதிப்பொதுச் செயலாளர்

மாஸ்கோ, ஜூலை 13 சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தனது சரித்திரத்திலேயே முதல் தடவையாக பிரதிப்பொதுச் செயலாளர் ஒருவரைத் தெரிவு செய்தது

கட்சியின் 28 ஆவது வருடாந்த மாநாட்டில் இத் தெரிவு இடம்பெற்றது

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவின் தீவிர ஆதரவாளர் ஒருவரே அப்பதவிக்குத் தெரிவானார்.

அப்பதவிக்குப்போட்டியிட்ட கோர்பச்சேவின் அரசியல் எதிரியும் பழமைவாதியுமான திரு லிகவேச் தோற்றுப் போனார்

கட்சிப்பொதுச் செயலாளராக திரு கோர்பச்சேவ் கடந்த செவ்வாய் நடைபெற்ற தேர்தலில் 7-1 என்ற வாக்குகள் வித்தியாசத்தில வெற்றி பெற்றார். (இ-எ)

## விநாடிக்கு மூவர்

லண்டன். ஜூலை 12 உலகின் ஜனத்தொகை ஒவ்வொரு வினாடியும் மூன்று பேரால் அதிகரித்து வருகிறது.

தினம் ஒன்றுக்கு சராசரி 5 லட்சம் பேரால் அதிகரிக்கும் உலகின் ஜனத்தொகை, ஆண்டு ஒன்றுக்கு ஒன்பது கோடியால் அதிகரிக்கிறது

இப்போது 530 கோடியாக இருக்கும் உலகின் ஜனத்தொகை இரண்டாயிரம் ஆவது ஆண்டில் 600 கோடியாகி விடும் என்று அறிவிக்கப்படுகிறது.

இலங்கையில் ஜனத்தொகை ... அதிகரித்து வருகிறது. (இ-எ)

## கென்யாவில் கிளர்ச்சி பிரிட்டன் கவலை

லண்டன் ஜூலை 13 கென்யாவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள அடக்கு முறைகள் குறித்து பிரிட்டிஷ் அரசு நைரோபி அரசாங்கத்திடம் தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

பல கட்சி ஆட்சி முறை ... கென்யாவில் எதிர்க்கட்சிகள் கிளர்ச்சி நடத்தி வருகின்றன. (இ-எ)

## தற்காலிக இடமாற்றம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த ஹோமியோ கிளினிக் அன்ட் பார்மசி தற்காலிகமாக யாழ்ப்பாணம் சிவகுருநாதர் வீதி. 39 ஆம் இலக்கத்திலும், பண்டத்தரிப்பு சந்திக்கு அருகாமையில் சித்தங்கேணி செல்லும் வீதியில் அமைந்துள்ள மனையிலும் இயங்குகின்றது என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(13723)

## அறிவித்தல்

இல 154, ஆஸ்பத்திரி வீதியில் சிற்றி ஏஜென்சி என்ற பெயரில் இயங்கிய எமது ஸ்தாபனத்தில் பில் கிளாக்காக பணிபுரிந்த காரைநகரைச் சேர்ந்த திரு. வே. கனகரத்தினத்திற்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவே எமது ஸ்தாபனத்துடன் தொடர்புடைய எவரும் இவருடன் எதுவித கொடுக்கல் வாங்கல்கள் செய்யவேண்டாம் என்று இத்தால் அறியத்தருகின்றோம்.

(13724)

## இடமாற்றம்

17/1, சின்னக்கடை வீதியில் உள்ள

**சிவலிங்கம் வைத்தியசாலை**

56, டேவிட் றோட்டுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(13725)

## PATRICIAN INSTITUTES

எமது தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் சகல மாணவர்களையும், விரிவுரையாளர்களையும்

16 - 07 - 1990 திங்கட்கிழமைக்கு முன்

அலுவலகத்திற்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பதிவாளர்,

**பற்றீஸியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,**

59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(ச-5263)

## இடமாற்றம்

★ ஆனந் மோட்டோர்ஸ் ஸ்ரோஸ் ★

177, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் சூழ்நிலை காரணமாக

இப்போது

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, தாவடி,
கொக்குவில்.

என்ற முகவரியில் தற்காலிகமாக நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

விற்பனை நேரம்: காலை 9.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணி வரையும்

[13722]

## இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

146, நவீன சந்தையில் இயங்கி வந்த

**'அரஸ் ரெக்ஸ்ரைல்ஸ்'**

தற்போது பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு 550/8A, கே. கே. எஸ். வீதி, (தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்) யில் அமைந்துள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

முக்கிய குறிப்பு: புடவை வகைகள் மலிவு விலையில் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது.

**அரஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,**

550/8A, K. K. S. வீதி,
(தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

(13712)

### உயர்தர மாணவர்களுக்கான

## கருத்தரங்கு

வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் தற்போதைய சூழ்நிலை காரணமாக பாடசாலைகளும் தனியார் கலவி நிறுவனங்களும் மூடிக்கிடப்பதால் மாணவர்களது கல்வி பெருமளவு பாதிப்படைந்துள்ளது குறிப்பாக க. பொ. த (உயர்தரம்) '90 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பெரிதும் அல்லலுறுகின்றனர் இவர்களது நலன் கருதி யாழ்/றோட்டரக்ட் கழகத்தினர் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து 21ஆம் திகதி சனிக்கிழமை வரை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இக் கருத்தரங்கை நடாத்த உத்தேசித்துள்ளனர்.

மேற்படி கருத்தரங்கு முற்றுமுழுதாக மாணவர்களைப் பரீட்சைக்குத்தயார் செய்யும் நோக்குடன் துரித மீட்டல் வகுப்புகளையும் வினாவிடை வகுப்புகளையும் கொண்டிருக்கும். எவ்வித கட்டணமுமின்றி, பரீட்சைக்குத் தோற்றும் சகல உயர்தர மாணவர்களும், குறிப்பாக வெளி மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மாணவர்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

றோட்டரக்ட் கழகத்தின் வேண்டுகோளுக்கமைய கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகளுக்குரிய பாடங்களை பிரபல ஆசிரியர்குழு சேவை நோக்குடன் பின்வரும் நேர அட்டவணைக்கமைய நடாத்த முன் வந்துள்ளது

**நேர அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| ஜூலை 13—14 | மு.ப. 9-12 | வர்த்தகம் | ஜெயராமன் |
| | பி.ப. 1- 4 | தாவரவியல் | குகாதரன் |
| ஜூலை 16—17 | மு.ப 9-12 | கணக்கியல் | ஸ்ரீ |
| | பி.ப. 1- 4 | விலங்கியல் | நாகநாதன் |
| ஜூலை 18—19 | மு.ப. 9-12 | பொருளியல் | வரதராஜன் |
| | பி.ப. 1- 4 | இரசாயனவியல் | தில்லைநாதன் |
| ஜூலை 20—21 | மு.ப. 9-12 | தூயகணிதம் / பிரயோககணிதம் | பிரேம்நாத |
| | பி.ப 1- 4 | பௌதிகவியல் | அருள்தாசன் |

[சி-5258]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யார் பக்கம் பேசுவதற்கு..?

வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தம் பற்றிய நிலையை "சார்க்" அமைப்பின் அங்கத்துவ நாடுகளுக்கு நேரில் சென்று விளக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

அதுவும் அனைத்துக்கட்சிக் குழுவொன்றையே 'சார்க்' நாடுகளுக்கு அனுப்ப முடிவாகி உள்ளது.

யுத்தம் வடக்கு - கிழக்கில் நடக்கிறது. அது தொடங்கிய இரண்டொரு நாட்களிலேயே கொழும்புக்கும் தமிழ்ப் பகுதிகளுக்கும் இடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. இங்கு உண்மையாக நடப்பவை என்ன என்பதை கொழும்பில் உள்ளவர்கள் அறிந்து கொள்ள எந்த வசதியும் இல்லை.

தொலைபேசித் தொடர்பு இல்லை. தபால் தொடர்பு இல்லை. இங்குள்ள நிலைமைகளை இங்கிருந்து எவரும் போய் நேரில் சொல்வதற்கும் ரயில், வாகனப் போக்குவரத்து இல்லை. எந்த அரசியல் கட்சியின் பிரதிநிதியும் வடக்கு-கிழக்கை நேரில் வந்து தனது சொந்தத்தில் பார்த்து உண்மை நிலையை அறிந்ததும் இல்லை. (கிழக்குக்கு மட்டும் ஒரு சில பிரதிநிதிகள் அரசாங்கத்தின் அழைப்பு விருந்தினர்களாகச் சென்றிருக்கிறார்கள்)

இத்தகைய ஒரு நிலையில் வடக்குக் - கிழக்கில் உள்ள இராணுவ அதிகாரிகள் கொடுக்கும் தகவல்களை அடிப்படையாக வைத்து அரசாங்கமும், கொழும்புப் பத்திரிகைகளும் வெளியிடும் அறிக்கைகள், செய்திகள் மூலமே அரசாங்கத்தைச் சேராத ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள் வடக்கு - கிழக்கு நிலையை அறிந்திருக்க முடியும்.

மொத்தத்தில அரசாங்கத் தரப்புத் தகவல்களை வைத்தே யுத்தநிலை, பின்னணி, விளைவு, நிகழ்வுகள் குறித்து எதிர்க்கட்சி பிரதிநிதிகளும் ஒரு கருத்தை தமது மனதில் கற்பனை செய்திருக்க முடியும்.

இந்த நிலையில் அனைத்துக் கட்சித் தூதுக்குழு என்று பெயருக்கு இருந்தாலும் அரசாங்கத்தின் நிலைப்பாடே 'சார்க்' நாடுகளுக்குத் தெரிவிக்கப்பட உள்ளது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

விடுதலைப்புலிகளுடன் போர் என்று கூறினாலும் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்கள், திட்டமிட்ட முறையில் இனப்படுகொலை இன ஒழிப்பு- நடக்கிறது என்பதற்குக் கிழக்குச்சம்பவங்கள் போதுமான சாட்சிகள்.

ஆனால் "சார்க்" நாடுகளுக்குச் செல்லும் தூதுக்குழு இந்த இனப்படுகொலைகளை மறைத்து அல்லது நியாயப்படுத்தும் விதத்தில ஒரு பக்க — அரச பக்க — நிலைப்பாட்டைத்தான் காட்டப் போகிறது.

எனவே இந்த அனைத்துக் கட்சிக்குழுவில இடம்பெறும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் தமிழர் இனப்படுகொலை செய்யப்படுவதை நியாயப்படுத்திய கருத்துத் தெரிவிக்க நிர்ப்பந்திக்கப்படுவர்.

இதனை உணர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன அந்தக் குழுவில இருந்து வாபஸ் பெற்றுவிட்டன. அதே போல ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகளும் வாபஸ் பெற வேண்டும். தென்னிலங்கையர்களின் அரசியல் கட்சிகள் மட்டும் சென்றால் ஒருபக்கப் படமே காட்டப்படுகிறது என்பதை வெளிநாடுகளும் இலகுவில உணர்ந்து கொள்ளும். தூதுக்குழுவின் தகவல், கருத்து என்பவற்றுக்கும் போதிய தாக்கம் இருக்காது.

இந்த விடயத்திலாவது தமிழர் அரசியல் கட்சிகள ஒத்த கருத்துடன், ஒற்றுமையுடன் செயற்படுகின்றனவா என்பதை தமிழ் மக்கள் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை அவை மறந்துவிடலாகாது.

# பெரும் சிரமத்தின் மத்தியிலேயே ஆனையிறவு ஊடாக போக்குவரத்து

## மாலை 5 மணியுடன் பாதை மூடப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆனையிறவு ஊடாக செல்லும் வாகனங்கள் காலை 7.00 மணியில் இருந்து நண்பகல்12.00மணிவரையும்,பிற்பகல் 2.00 மணியில் இருந்து மாலை 5.00 மணிவரையுமே படையினரால் சோதனையிடப்படுகின்றன. மாலை 5.00 மணிக்குப் பின் இந்தப் பாதை போக்குவரத்துக்கு மூடப்படுகிறது.

இதனால் ஆனையிறவு ஊடாக பயணம் செய்யும் வாகனங்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

சங்குப்பிட்டி-கேரதீவு கடற்பாதை ஊடான போக்குவரத்துபடையினரால் தடைசெய்யப்பட்டதை அடுத்து தற்போது வாகனங்கள் ஆனையிறவு ஊடாகவே சேவை ஆற்றுகின்றன.

படையினரின் சோதனைக்காக வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை இருந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## மண்கும்பானில் தங்கியிருந்த முஸ்லிம்கள் இடம் பெயர்வு

வேலணை, ஜூலை 13

யாழ். நகரில் இருந்து இடம் பெயர்ந்து வேலணை, மண்கும்பான் பள்ளிவாசலில் தங்கி இருந்த முஸ்லிம் அகதிகளில் பெரும்பாலானோர் தற்போது புத்தளம், கொழும்பு, கண்டி ஆகிய பகுதிகளுக்கு மீண்டும் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதனால் மண்கும்பான் பள்ளிவாசலில் அகதிகள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. (இ-167)

## மக்கள் வங்கி ஸ்ரான்லி கிளை இயங்குகிறது

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக்கிளையில் தினமும் 9 மணிமுதல் 10 மணிவரை மட்டுப்படுத்தப்பட்ட பணக் கொடுக்கல் வாங்கல் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி வங்கியில யாழ் நவீன சந்தை பிரதான வீதி ஆகிய கிளைகளின் கருமபீடங்களும் செயற்பட்டன. (ஒ-10)

போர்க்கால நடவடிக்கைக்கு

## தினமும் 3 மினி பஸ்களை கொடுத்து உதவ கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13

வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத்துக்கும், சமாசத்துக்கும் சொந்தமான சகல வாகனங்களையும் நாள் ஒன்றுக்கு மூன்று வாகனங்கள் வீதம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கி விடுதலைப் போராட்டத்துக்கு உதவுமாறு வடபிராந்திய மினி பஸ் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதே நேரம் சகல மினி பஸ் சங்க உறுப்பினர்களையும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் முத்திரைச்சந்தி பஸ் நிலையத்தில் கூடுமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-3)

## ஒரு மாத காலத்தின் பின் தீவுப்பகுதிக்கு மின்சாரம்

வேலணை, ஜூலை 13

கடந்த ஒரு மாத காலமாக இருளில் மூழ்கிக் கிடந்த தீவுப் பகுதிகளுக்கான மின்சாரம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.00 மணி அளவில் மீண்டும் கிடைத்தது.

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் காரணமாக கடற்படை முகாமுக்கு சமீபமாக உள்ள மின் இணைப்புக்கள் சேதம் அடைந்ததாலேயே தீவுப் பகுதிகளுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

வேலணை மின் அத்தியட்சகர் பிரிவு ஊழியர்கள் நயினாதீவு கடற்படை முகாமுக்குச் சென்று உத்தரவு பெற்றுவந்து மின் இணைப்பை மீண்டும் ஏற்படுத்தினர். (இ-167)

## ஜீ. சி. ஈ. உயர்தர மாணவருக்கு இன்று முதல் இலவச விரிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 13

அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஜீ.சி.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை முதல் 21 ஆம் திகதி வரை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் விசேஷ கருத்தரங்கு ஒன்றை யாழ் - றோட்டரக்ட் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக பாடசாலைகளும், தனியார் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளதால். மாணவர் நலன் கருதி இந்தக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களும், வெளி மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களும் இந்தக்கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம். கட்டணம் எதுவும் அறிவிடப்படமாட்டாது என்று கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ள றோட்டரக்ட் கழகப்பிரமுகர் தெரிவித்தார்.

கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகதுறைசார்ந்தஆசிரியர்கள் கருத்தரங்கில் விரிவுரை ஆற்றுவார்கள். (இ - 3)

## மானிப்பாயில் பதுங்குகுழிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

மானிப்பாய்ப் பகுதி இளைஞர்கள் பொது இடங்களில் பதுங்கு குழிகளை அமைத்து வருகிறார்கள்.

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாகவும் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களிலுமேயே பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கு தேநீர், சிற்றுண்டிகளை அப்பகுதி வர்த்தகர்கள் வழங்கி உதவுகிறார்கள். (இ-3)

# தென் இலங்கைப் பாணியில் கிழக்கில் தொடரும் கொலைகள்

## இளைஞர்கள் கொல்லப்பட்டு சடலங்கள் வீதிகளில்

ஏ. எப். பி. செய்தியாளர் சமீபத்தில் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்தார். அவர் அங்கு நேரில் கண்டவற்றையும், பொது மக்களிடமிருந்து திரட்டிய தகவல்களையும் வைத்து எழுதிய கட்டுரையின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் படுகொலைகள் இடம்பெறுகின்றன.

தென்பகுதியில் ஜே வி பி யினரின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுவோரை படுகொலை செய்து சடலங்களை அடையாளம் தெரியாதபடி எரித்து வீதி ஓரங்களில் எறிந்தது போன்று, கிழக்கு மாகாணத்திலும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுவருகின்றனர்.

அரசுக்கு ஆதரவான பிரா' (PRRA) என்ற கொலைப் படையினரே இச்செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகிறது

### சடலங்களை குதறும் நாய்கள்

மட்டக்களப்பு நகரில் அண்மையில் எரிந்த நிலையில் காணப்பட்ட ஐந்து சடலங்கள் எவராலும் அகற்றப்படவில்லை. அதனால் அந்த சடலங்களை நாய்களும் காகங்களும் உண்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

அந்தச் சடலங்கள் மீது விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை வசைபாடும் வசனங்கள் காணப்பட்டன

இதே போன்று தென்பகுதியில கொல்லப்பட்ட ஜே.வி.பி. இளைஞர்களின் சடலங்கள் மீது றோஹண விஜேவீராவை வசைபாடும் வசனங்கள் காணப்பட்டன.

அரசின் கொலைப்படையான 'பிரா' இக்கொலைகளைப் புரிந்து வருவதாக மக்களில் பலர் கூறினர்.

இக்கொலைப்படை ஜே.வி.பி யினரை அழித்தது போல விடுதலைப் புலிகளையும் அழித்து விடலாம் என்று திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதனால் மக்கள் பயந்த நிலையில் வாழ்கின்றனர் என தெரிவித்தனர்

### சயனைட் பூசிய கத்தி

சந்தேகப்படும் விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகளை இக் கொலைப்படை சயனைட் பூசிய கத்தியால் குத்திக் கொல்வதாகவும் கூறப்படுகிறது

இதனைக் கல்முனைப் பகுதியில் புலிகளை ஆதரிக்காதவர்களே என்னிடம் தெரிவித்தனர்

கல்முனையில் பதினைந்து தமிழ் இளைஞர்களின் சடலங்களை கறுப்பு உடையில் வந்த இராணுவ வீரர்கள் வீதியில வீசி விட்டுப்போனார்கள்

கொல்லப்பட்ட இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதளவு எரிக்கப்பட்டு இருந்தன.

விமானத்தாக்குதலின் போது இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் அரசுக்கு ஆதரவான கொலைப்படையே இக் கொலைகளைச் செய்திருக்கவேண்டும் என்று கல்முனைவாசிகள் தெரிவித்தனர்.

# உதவி கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

கோட்டங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கொத்தணி அதிபர்கள், தேசிய பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கான கூட்டம் ஒன்று 16 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லூர் ஸ்தான சி:சி:த.க. பாடசாலை மண்டபத்தில் வட பிராந்தியக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கொத்தணி அதிபர்கள்,தேசிய பாடசாலை அதிபர்கள் கோரப்படுகின்றனர்.

கூட்டத்திற்கு வரும் பொழுது சமீபத்திய சம்பவங்களால் சேதமடைந்த பாடசாலைகளின் விவரங்கள், அகதி முகாம்களாக உள்ள பாடசாலைகளின் விவரங்கள் தற்போது இயங்கும் பாடசாலைகளின் விவரங்கள் என்பனவற்றைச் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கொண்டு வருதல் வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (இ)

முல்லைத்தீவு

## ஆஸ்பத்திரி மீது ஷெல்; ஆறாம் வார்ட் சேதம்!

யாழ்ப்பாணம், ஜூலை 12

முல்லைத்தீவு ஆஸ்பத்திரி மீது ஷெல் விழுந்தது! அதனால் அந்த ஆஸ்பத்திரியின் 6 ஆம் வார்ட் பலத்த சேதமடைந்து விட்டது!!

சயனின்று முல்லை இராணுவ முகாமிலிருந்து காலை 8 மணி முதல் 12 மணிவரை ஷெல் வீச்சுகளும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

ஹெலிக்கொப்டர் ஒன்று முல்லைத்தீவு முகாமினுள் உணவுப்பொதிகளை போட முயற்சித்தது. அப்போது ஹெலிக்கொப்டர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதனை அடுத்து ஷெல் வீச்சும், துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

ஷெல்களில் ஒன்று ஆறாம் வார்ட் மீது விழுந்தது. அது பலத்த சேதமடைந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு ஆஸ்பத்திரியை மீண்டும் திறக்கும் வேலைகள் கைவிடப்பட்டு தொடர்ந்தும் வைத்திய சாலை புதுக்குடியிருப்பிலேயே இயங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (அ-9)

## மாகாண...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தற்கு ஏதுவாக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யலாம் என்று நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஒ-எ)

## அகதி முகாம்களில் செய்ய வேண்டியவை.....

தமிழர்களில் ஏழில் ஒரு பங்கினர் அகதிகளாகி விட்டனர். நகரங்கள், கிராமங்கள் என்ற வேறுபாடில்லாமல் எங்கும் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த அகதிமுகாம்களில் தொண்டு புரிவதற்கென ஒரு தொண்டர் படை தேவை என்று எமது வாசகர்களில் ஒருவர் கருத்துத் தெரிவிக்கிறார்.

உத்தேச தொண்டர் படையில் சேர்வோர் என்ன பணிகளைச் செய்யலாம் என்பது குறித்தும் அவர் ஆலோசனை வழங்கி உள்ளார்.

இத்துறையில் ஈடுபாடுடையவர்களின் தகவலுக்காக அவரது ஆலோசனையை மக்கள் சந்தியில் தருகிறோம்:-

### தொண்டர் படையும் பணிகளும்

கட்டுப்பாடு, நலலொழுக்கம், சேவை மனப்பான்மை, திட்டமிடும் ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இளைஞர்கள் ஒருங்கு சேர்ந்து செயற்பட ஓர் தொண்டர்படை உருவாக்குதல் மிக அவசியமாகும்.

அந்தத் தொண்டர் படைக்கு பரந்த மனப்பான்மையுடன் பாகுபாடின்றி பொறுமையுடன் செயற்பட ஒரு தலைவர் நியமிக்கப்பட வேண்டும்.

குறிக்கோள்: "சேவை செய். சேவை கிடைக்கும்"

தொண்டர் படையைச் சேர்ந்தவர்கள் பின்வரும் பணிகளைச் செய்ய வேண்டும்.

01 விறகு சேகரித்தல்

02 நீர் சேகரித்தல்-கொதித்தாறிய நீர் உபயோகிக்க வழி வகுத்தல்

**மக்கள் சந்தி**

03 முகாமில் நீர் தேங்கி நிற்காது பாதுகாத்தல்

04. குப்பை கூளங்களை எரித்தல் அல்லது குழி தோண்டிப் புதைத்தல்.

05 மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல். மிகவும் சுத்தமாக உபயோகிக்க வழி வகுத்தல்-நோய் அணுகாது பாதுகாத்தல்.

06 காயப்பட்டவர்களுக்கு உடன்சிகிச்சை அளித்தல்.

07. நோய் வாய்ப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற ஏற்பாடு செய்தல்.

08 உணவுப்பொருள்களை சேகரித்து விநியோகித்தல்

★ இலைக்கறி வகைகள் – முருங்கை, அகத்தி சண்டி, முசுட்டை, பசளி, வல்லாரை, குறிஞ்சா, தவசி முருங்கை, பொன்னாவரசு, இபபில் இப்பில் ஆகியவற்றை உணவில் சேர்ப்பதற்குச் சேகரித்தல்.

09 உணவுப் பொருள்களை வீணாக்காது சிக்கனமாக சமைத்தல்.

10. முகாமில் இருப்போர் பாக்கு வெற்றிலை உண்பதை தவிர்க்க அறிவுரை வழங்குதல் புகைத்தலையும் தவிர்த்தல் மதுபானம் அருந்துதலை முற்றாக ஒழித்தல் } புற்று நோய் இதய நோய் ஏற்படாது பாது காக்கும் வழிகளாகும்.

11. ஓய்வு நேரத்தை நல்லமுறையில் பயன்படுத்த வழி செய்தல்- ஆற்றலுக்கு ஏற்றவாறு சுய தொழிலில் ஈடுபடல்: சுற்றாடலைப் பாதுகாக்க உதவுதல்.

12. ஒற்றுமையைப் பேணல்-திருட்டுக்கு இடமளிக்காது பாதுகாத்தல்.

13 பாதுகாப்பு முறைகளை வலியுறுத்தல்.

14. சமய வழிபாட்டில் தினமும் ஈடுபட வழிசெய்தல்.

சி. எஸ். சுப்பிரமணியம்,
செல். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம்

## இந்து இளைஞர் பேரவையின் கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜூலை13

அகதிகளுக்கான தொண்டுகளில் ஈடுபடுவது குறித்து ஆராய்வதற்காக யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாளை சனிக்கிழமை பத்து மணிக்கு கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இதில் இந்து சமய சேவையில் ஈடுபட்டுள்ள சகல சமய நிறுவனங்களையும் பங்குபற்றுமாறு பேரவையினர் கேட்டுள்ளனர். [அ-30]

## ஆனையிறவு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சென்ற பஸ்கள் திரும்பி வந்தன.

இதே வேளை கட்டைபறிச்சானில் நடத்தப்பட்ட கடும் தாக்குதலைத் தொடர்ந்துஇராணுவத்தினர் மூதூருக்குச் சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [அ-9-3]

## கொக்காவில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த கப்டன் உஷா[முள்ளியவளை], மாலா [வல்வெட்டித்துறை], சாலினி(வல்வெட்டித்துறை], பிரியங்கா [வல்வெட்டித்துறை], அஜந்தா [கல்வியங்காடு], குமாரி [திருகோணமலை] ஆகிய பெண் போராளிகளும்-

கப்டன் பாபு [மன்னார்], கப்டன் சுகுமார் [திருகோணமலை], லெப்டினன்ட் நியூட்டன் [கிளிநொச்சி], லெப்டினன்ட் மாவி [துணுக்காய்], இரண்டாம் லெப்டினன்ட் ஹமீத் [துணுக்காய்], இரண்டாம் லெப்டினன்ட் நிலான் [வட்டக்கச்சி], இரண்டாம் லெப்டினன்ட் ஜெயா [வவுனியா], கோபி [அம்பாறை), நவம் [திருகோணமலை], நிர்மன் [உமையாள்புரம்], வினோத் [தென்னமரவாடி], மருது [புதுக்குடியிருப்பு] ஆகிய போராளிகளும் இந்தத் தாக்குதலில் வீரமரணம் அடைந்தனர். (உ-எ-9)

## தற்கொலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காங்கேசன்துறையில் விடுதலைப்புலிகள் ஒரு கப்பலைத் தாக்கிச் சேதப்படுத்தியிருக்கிறார்கள்.

இத்தாக்குதலில் ஈடுபட்ட மூன்று வள்ளங்களில் ஒன்று நிர்மூலமாக்கப்பட்டுள்ளது;

வெடிப் பொருள்கள் நிறைந்த மற்றும்ஒருவள்ளம்வெடித்துச் சிதறியது.

மூன்றாவது வள்ளம் தப்பிச் சென்றுவிட்டது –

**மன்னாரில்**

மன்னார் மாவட்டத்திலும் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பாலம் ஒன்று வெடிவைத்துத் தகர்க்கப்பட்டிருப்பதால் மன்னார்ப்பகுதிக்குக் கடல் மார்க்கமாக உணவுப்பொருள்களைக் கொண்டுசெல்ல ஏற்பாடாகியுள்ளது.

தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டுவதற்காகப் பாதுகாப்புப் படையினர் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

இராணுவத்தினரின் அனுமதி கிடைத்ததும் மட்டக்களப்பிலும் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-எ)

## ஈழத் தமிழர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான திரு மு. கருணாநிதி கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவத்தினர் தமிழர் மீது நடத்தி வரும் தாக்குதல் குறித்து கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

"இலங்கை இராணுவத்தின் தாக்குதல் காரணமாக தமிழ் அகதிகள் பெருமளவில் தமிழகம் வந்திருப்பது, ஈழத்தில உள்ள தமிழரின் உயிருக்கும், உடமைக்கும் இலங்கையில் பாதுகாப்பு இல்லை என்பதை உணர்த்துகிறது"

இவ்வாறு அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 இறாம்
**அண்ணா கோப்பி**
100 வீதம் சுத்தமானது

இது கைதேர்ந்த தொழிலாளர்களினால் காற்றுப் புகாவண்ணம் அடைக்கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது. இதை வாங்கிப் பாவித்து,

இதன் வெற்றுப் பைக்கட்டுகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.

# உதயன்

13 - 7 - 1990 வெள்ளிக்கிழமை

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

**" ஜீவாகாரம் "**

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளன.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

# கல்முனையில் தமிழர்கள் கொலை; ரஞ்சன் ஒப்புக் கொண்டார்!

கொழும்பு, ஜூலை 13
கல்முனை நகரத்தில் தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் என்பதை பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா ஒப்புக்கொள்கிறார்.

நேற்றுத் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து அந்தச் சம்பவம் நடந்தது உண்மை தான் என்று அவர் கூறினார்.

அமைச்சர் ரஞ்சன் இது குறித்துச் சொன்னதாவது;
கல்முனை நகரில் சில தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

கிழக்குப் பகுதி இராணுவ நடவடிக்கையில் பொதுமக்கள் சிலரும் கொல்லப்பட்டது உண்மை தான்.

போட்டித் தமிழர் குழுக்கள், முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களால் விடுதலைப் புலிகள் என்று அடையாளங் காட்டப்பட்டவர்களை இராணுவத்தினர் கொன்றனர்.

இவ்வாறு போட்டிக் குழுக்களினால் அடையாளங் காட்டப்படுவோர்மீது நடவடிக்கை எடுக்கும் போது, எதிர்காலத்தில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படாமல் கவனமாக நடந்து கொள்ளுமாறு இராணுவத்தினருக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது.

**50 பேர் என்று தகவல்**

இதேவேளை —
கல்முனை நகரில் அரச படைகளால் 50 பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டுள்ளனர் என்று ரெலோ குற்றஞ்சாட்டி இருப்பதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது. [அ-எ]

## ரஞ்சனைக் கண்டிக்கிறார் முஸ்லிம் காங்கிரஸ் அஷ்ரப்

கொழும்பு, ஜூலை 13
முஸ்லிம் தீவிரவாதக் குழு ஒன்றுதான் கல்முனை நகரில் பழிவாங்கும் நடவடிக்கையாகத் தமிழரைக் கொன்றதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் கண்டித்தார்.

அமைச்சரின் கூற்று, பொறுப்பற்ற தன்மையானது என்றும் –

ஜிஹாத் என்றொரு இயக்கம் முஸ்லிம்கள் மத்தியில் இல்லை என்றும்– ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்.

## அனைத்துக்கட்சி குழுவில் ஆறு கட்சிப் பிரதிநிதிகளே!

கொழும்பு, ஜூலை 13
சார்க் நாடுகளுக்கு செல்லவிருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் தூதுக் குழுவில் ஆறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர்,

ஐக்கியதேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சோஷலிச அணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியனவே இக் குழுவில் இடம் பெறும் கட்சிகளாகும்.

இம்மாதம் 17 ஆம் திகதி புதுடில்லி செல்லும் இக் குழுவினர் 20ஆம் திகதி வரை இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரைச்சந்தித்து உரையாடுவர்.

19, 20 ஆம் திகதிகளில் ஜனாதிபதி வெங்கடராமன், பிரதமர் வி. பி. சிங், வெளியுறவு அமைச்சர் குஜ்ரால், சபாநாயகர் ரபிராய் ஆகியோரையும் அவர்கள் சந்திப்பர். (உ-எ)

## சிப்பாய்கள் எழுவர் காயம்

கொழும்பு, ஜூலை 13
திருகோணமலை பாலம் பட்டாறுக்கு அருகில் குரங்குப்பாலம் என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஸ்ரீலங்கா சிப்பாய்கள் ஏழு பேர் காயமடைந்தனர்.

கொழும்பு இராணுவ வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. (ஒ-எ)

## படையினரில் ஒரு பிரிவினர் தள்ளாடி முகாம் அடைந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 13
சிலாபத்துறையில் இருந்து வந்த 5 ஆயிரம் துருப்புக்கள் கொண்ட இராணுவ அணியில் சுமார் 2 ஆயிரம் துருப்புக்கள்கொண்ட அணி புதன் கிழமை மாலை தள்ளாடி முகாமை அடைந்தது.

மற்றைய அணியினர் பறையனாலங்குளம் முகாம் படையினருடன் சேர்ந்து அடம்பன் பாதையூடாக வர முயற்சி செய்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது

தள்ளாடி முகாமிலிருந்து தினமும் மன்னாரையும், அடம்பன், மாந்தை ஆகிய இடங்களையும் நோக்கி ஷெல் வீச்சுக்கள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

## திருக்கேதீஸ்வரம் - மாந்தை பகுதிகளில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 13
திருக்கேதீஸ்வரம் ஆலய சுற்றாடல் பகுதிகளிலும், மாந்தை சந்தியிலும் செவ்வாய்க்கிழமை விமானங்களில் இருந்து குண்டு வீச்சு நடைபெற்றது.

காலையில் இருந்து இரு தடலவகள் விமானங்கள் வட்டமிட்டுத் தாக்குதல் நடத்தின.

இதனைத் தொடர்ந்து மாந்தை, அடம்பன், திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வெளியேறி பாப்பாமோட்டையை நோக்கி வருகிறார்கள். (இ-3)

### நல்லூர் பகுதி

## வாகன உரிமையாளரை சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13
நல்லூர் பிரதேச எல்லைக்கு உட்பட்ட சகல வாகன (மோட்டார் சைக்கிள்கள் உட்பட) சொந்தக்காரர்களும், சாரதிகளும் இன்று வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நல்லூர் பிரதேசப் பொறுப்பாளர் அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ-3)

## 3 முக்கிய பிரமுகர்களுக்கு அ.தி.மு.க விலிருந்து கல்தா!

### ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஜூலை 13
முன்னாள் அமைச்சர்கள் ப. குழந்தைவேலு, எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். இராமச்சந்திரன் ஆகிய மூன்று முக்கிய பிரமுகர்கள் உட்பட 16 பேர் அ.தி.மு.க வின் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்து நேற்று வெளியேற்றப்பட்டனர்.

கட்சிக் சட்டுப்பாட்டை மீறியதற்காக இவர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி எஸ். ஜெயலலிதா நேற்றுச் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

இதேவேளை–
37 பேருடன் இருந்த அ. தி. மு. அரசியல் குழுவில் மேலும் 49 பேர் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜமணி இராஜநாயகம்

உரும்பராய்

மந்துவில் இக்காலம் உரும்பராய் ஆசிரியர் நா. இராஜநாயகத்தின் மனைவி ஆசிரியை இராஜமணி காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1990-07-13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 2-00 மணியளவில் உரும்பராய், வேம்பன் மயானத்தில் நடைபெறும். அனுதாபிகள் அனைவர்க்கும் இவ்வறிவித்தல் உரித்தாகுக.

தகவல்:
க. செல்வநாயகம்

''சந்திரிகை''
சிவகுல வீதி,
உரும்பராய்.

[13659]

### ஐயம்பிள்ளை கதிர்காமத்தம்பி

சுண்டுக்குளி, இல. 65, கொழும்புத்துறை வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரத லிகிதர் ஐயம்பிள்ளை கதிர்காமத்தம்பி காலமானார்.

இவர் காலஞ்சென்ற மதியாபரணத்தின் அன்புக் கணவரும், சின்னராசாவின் சகோதரருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (13-07-1990) காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
திருமதி தவனேஸ்வரி செல்வரத்தினம்
[தங்கா]

65, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

[13660]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கரும்புலிகளுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 13
வல்வெட்டித்துறை கடலில் ஸ்ரீலங்கா போர்க்கப்பலை தாக்கியதில் வீரமரணமடைந்த கரும்புலிகள் மூவருக்கும் நேற்று யாழ். குடாநாடு எங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடைகள், வாகனங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. முக்கிய சந்திகளில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

அஞ்சலி பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

[ஒ-10-9]

## யாழ்தேவி மதவாச்சி வரை

கொழும்பு, ஜூலை 13
யாழ்தேவி ரயில் சேவை கடந்த புதன்கிழமை தொடக்கம் கொழும்பில் இருந்து மதவாச்சி வரை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ:எ)

## மருந்து வகைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கொண்டுவரப்படஉள்ள மருந்து வகைகளில் யாழ். ஆஸ்பத்திரிக்கு 10 தொன் மருந்து வகைகளும், யாழ். சுகாதார திணைக்களத்துக்கு 10 தொன் மருந்து வகைகளும் வழங்கப்படஉள்ளன. (ஒ-9)

## பதுக்கல் பொருள்கள் மீட்பு

காரைநகர், ஜூலை 13
காரை நகரிலுள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 7 மூடை சீனி உட்பட பல அத்தியாவசியப் பொருட்கள் விடுதலைப் புலிகளினால் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. (உ-ரி)

## தலை இல்லாத சடலம்

வேலணை, ஜூலை 13
அல்லைப்பிட்டி இறாத்தலடி மீன்பிடித்துறைமுகத்தில் தலை இல்லாத 16 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியது.

உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட இந்த சடலத்தை அல்லைப்பிட்டி விழிப்புக்குழுவினர் எடுத்து அடக்கம் செய்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-167)

## ஈழத் தமிழ் அகதிகளுக்காக மேலும் இரண்டு கூடங்கள்

### மண்டபத்தில் உடனடியாக நிறுவப்படும்

சென்னை, ஜூலை 13
இலங்கையில் இருந்து பெருமளவில் வரும் தமிழ் அகதிகளைத் தங்கவைப்பதற்காக மண்டபம் பகுதியில் மேலும் இரண்டு கூடங்களை நிறுவ தமிழக அரசு 15½ லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கூடங்கள் அமைக்கப்படும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்படவிருப்பதாக மறுவாழ்வுத்துறை உதவி ஆணையாளர் திருமதி சி. கே. கரியாலி தெரிவித்தார்.

இதேவேளை- கடந்த புதன் கிழமை மட்டும் 50 படகுகளில் சுமார் 4 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்தனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து நேற்று ஆயிரத்து 600 இலங்கைத் தமிழ் அகதிகள் ரயில்கள் மூலம் கடலூர், சிதம்பரம் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அ-எ)

## வற்றாப்பளை அம்மன் ஆலய அகதிகள் மீது ஹெலி சூடு!

### இளம் பெண் பலியானார்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் அகதிகளாக இருந்தவர்கள்மீது ஹெலியில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அகதிகள் பாதுகாப்புத் தேடி ஓடினார்கள். அதில் 20 வயது மதிக்கத்தக்க இளம்பெண் பலியானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலில் வற்றாப்பளை அம்மன் ஆலயமும் சிறிது சேதமுற்றது. (இ-3)

## இந்திய மத்திய அரசின் அசமந்தம்; இ. காங்கிரஸ் மீண்டும் சாட்டை

புதுடில்லி, ஜூலை 13
மோசமடைந்து வரும் இலங்கை நெருக்கடி குறித்து இந்திய மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்காது அசம்பந்தமாக இருப்பது குறித்து அகில இந்திய காங்கிரஸ் கட்சி மீண்டும் கண்டித்து உள்ளது.

கட்சியின் பேச்சாளர் எம். ஜே. அக்பர், எம். பி. கடந்த புதன்கிழமை செய்தியாளர் மத்தியில் பேசுகையில் கட்சியின் நிலையை வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது:–
இலங்கை இராணுவத்தினரின் அட்டூழியங்கள் காரணமாக ஆயிரக்கணக்கில் இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியா வருவதை மத்திய அரசு தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் மீது மேற்கொண்டும், அக்கிரமங்கள் இழைக்கப்படாதவாறு அவர்களை இந்திய அரசு காப்பாற்றவேண்டும்.

பாகிஸ்தானிய போர்க் கப்பல்கள் கொழும்பில் நிலை கொண்டிருப்பது, இலங்கை நெருக்கடியில் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டுள்ளதான தெளிவான உண்மையை புலப்படுத்துகின்றது. -என்றார். (அ-எ)

## வெடிவைத்தகல்லில் மூன்றுபேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13
நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் பராக்கிரமபுரத்திலிருந்து வந்த படையினர் வெடிவைத்தகல் என்ற இடத்தில் வைத்து 9 தமிழர்களைக் கைது செய்தனர்.

அவர்களில் 6 பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கந்தையா சிவதாஸ் (வயது 22), கதிர்காமர் சுப்பிரமணியம் [வயது 40]. ஜெயந்தன் ஆகிய மூவரும் படையினரால் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டனர் (உ-9)

## உணவு லொறிகள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜூலை 13
கொழும்பிலிருந்து மதவாச்சிக்கு கொண்டுவரப்பட்ட உணவு, மருந்துப்பொருள்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற லொறிகளில் நேற்றுக்காலை ஏற்றப்பட்டன. இந்த லொறிகள் மதவாச்சியிலிருந்து புறப்பட்டு நேற்றுப் பகல் இரண்டு மணிக்கு மடுவை அடைந்தன.

இன்று பகல் இந்த லொறிகள் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மதவாச்சி உதவி அரசாங்க அதிபர் பொருள்களை லொறிகளில் இருந்து மாற்றும் வேலைகளை மேற்பார்வை செய்தார்.

இதேவேளை—
வடபகுதிக்கு தினசரி தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆகக்குறைந்தது 40 லொறி நிறைய உணவுப் பொருள்கள் தேவைப்படுகின்றன என்றும்—

தற்போது வரும் 15 லொறி உணவுப் பொருள்கள் வடக்கின் ஒரு பகுதி உணவுத் தேவையை தற்காலிகமாக சமாளிக்க கூட போதுமானதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ரூபவாஹினி அஞ்சல் நிலையம் புலிகளின் தாக்குதலில் சேதம்

### ரஞ்சன் நேற்று தகவல்

கொழும்பு, ஜூலை 13
கொக்காவிலில் உள்ள ரூபவாஹினி அஞ்சல் நிலையத்தை விடுதலைப் புலிகளின் தற்கொலை அணி தாக்கி அழித்து விட்டது.
– அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த அஞ்சல் நிலையத்தின் மீதும் அங்கிருக்கும் இராணுவ முகாம் மீதும் விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தாக்குதல் நடத்தி வந்தனர் என்றும்–

கொக்காவில் இராணுவ முகா[illegible] தாக்குப்பிடித்து எதிர்த்து நின்று கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

இதே வேளை—
புல்டோஸர்களைக் கொண்டு விடுதலைப் புலிகள் இந்த முகாம் மீது தாக்கினர் என்றும்—

இந்தத் தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும்—

ஒன்பது சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் அரசாங்கம் விடுத்த அறிக்கை ஒன்று தெரிவித்தது.

## சர்வோதயம் உதவி

மன்னார் பகுதியில் இடம்பெயர்ந்து உணவுப்பஞ்ச நிலையை எதிர்நோக்கியுள்ள அகதிகளுக்கு சர்வோதயம் உணவுப்பொருள்களை இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்புகிறது. [இ-3]

## வடக்கு, கிழக்கு யுத்தத்தில் இதுவரை 342படையினர் பலி

கொழும்பு, ஜூலை 13
வடக்கு- கிழக்கு யுத்தத்தில் இதுவரை 342 படையினர் உயிரிழந்தனர்412 படையினர் காயமடைந்தனர்.

இத்தகவலை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிரில் ரணதுங்க நேற்றுச் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

விடுதலைப் புலிகள் இப்போது சீருடை அணியாது தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர். மோதல்களில் அவர்கள் கொல்லப்பட்டவுடன் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று கூறிவிடுகின்றனர்.

பொதுமக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று கூறப்படுவதை நான் மறுக்கிறேன்.

இப்படி ஜெனரல் ரணதுங்க தெரிவித்தார். [ஒ-எ]

### கொழும்பில் தரித்து நின்ற

## வடபகுதி வாகனங்களை படையினர் பறித்தனர்!

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் தென்பகுதியில் தங்கிநிற்கும் வாகனங்களை இராணுவத்தினர் பலவந்தமாக எடுத்துச் சென்று தமது தேவைக்கு பயன்படுத்துவதாக அறியவருகிறது. கொழும்பில்4 ஆம்குறுக்குத் தெரு, டாம் வீதிப் பகுதியில் நின்ற லொறிகளும், கதிரேசன் வீதிப் பகுதியில் நின்ற மினி பஸ்களும் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

இவை துறைமுகத்திலிருந்து இராணுவத் தளபாடங்களையும், உணவுப் பொருள்களையும் மற்றும் சிப்பாய்களையும் ஏற்றி இறக்க பயன்படுத்தப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. (உ-9)

## உற்சவம் ஒத்திவைப்பு

வேலணை வங்களாவடி ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த உற்சவம் பின்போடப்பட்டுள்ளது. (இ-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org